1981 மார்ச் 6]

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலில் தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குட்பட்டதா இல்லையா என்பதைப்பற்றி அறிய வேண்டும், அதற்கென்று தனியாக ஒரு கேள்வி போட வேண்டும் என்று சொன்னார்கள். அதுவும் அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்வியோடு இணைந்ததாக இருப்பதால், இந்தக் கேள்வியிலேயே இணைத்து ஆராய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைப்பற்றி ஆராயலாம். அதைப்பற்றிய முழு விவரம் இப்போது என்னிடம் இல்லாததால், அதைப் பற்றித் தெரிவிக்க முடியவில்லை. ஆராய்ந்து சொல்கிறேன். அதற்கு இடமிருக்குமானால், அதைப்பற்றி ஆராய்வோம்.

திரு. பா. ரா. தாமஸ்: இதுவரையிலே எந்தத் துறையிலும் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தேர்வாணைக் குழுவிடம் ஒப்புதல் பெற வேண்டிய நிலை இருக்கிறது. இது புதிதாக வந்திருக்கின்ற நிலை என்று கருதுகிறேன். தேர்வாணைக் குழு வரன்முறைப்படுத்துவதை விட அவர்களுக்கு அரசே பதவி உயர்வு கொடுக்கக்கூடிய வகையில் ஆவன செய்யுமா? பாதிக்கப்பட்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கக் கூடிய வகையிலே அரசு ஆணை பிறப்பிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அங்கத்தினர்களின் கருத்துக்களின் அடிப்படையிலே அதை ஆராய்ந்து என்ன முடிவு எடுக்க இயலுமோ அதை எடுக்க இந்தத் துறை முயலும்.

*117 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether it is a fact that Selection Grade Scale of Pay is not awarded to the Teachers of Kallar Reclamation Schools in Madurai district; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (இ) மதுரை மாவட்டம் கள்ளர் பள்ளிகளில், 1—1—1980 தேதியன்று, தேர்வு நிலை பதவி பெற தகுதி பெற்ற எல்லா ஆசிரியருக்கும் தேர்வு நிலைப் பணிகள் கொடுக்கப்பட்டுவிட்டன.

சில ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஊதிய நிலுவையை கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

**திரு. பா. ரா தாமஸ்:** முதன் முதலாக 1—1—1971 அன்றும், அடுத்து 1—4—1973 அன்றும், அடுத்து 1—4—1974 அன்றும், அடுத்து 1—4—1975 அன்றும் தேர்வு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் இன்னும் தேர்வு நிலை வழங்கப்படாமல் இருந்தால், அவைகளை உடனடியாக வழங்கக்கூடிய அளவில் ஆணை பிறப்பிக்க மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்வு நிலை கொடுக்கப்பட்டுவிட்டது. அதிலே இடைநிலை ஆசிரியர்கள் 326, இளநிலை ஆசிரியர்கள் 343, பட்டதாரி ஆசிரியர்கள் 5, தொழில் ஆசிரியர்கள் 3, தமிழாசிரியர்கள் 3, உடற்பயிற்சி ஆசிரியர்கள் 5, ஓவிய ஆசிரியர் 1, ஆக மொத்தம் 686 ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட்டுவிட்டது. சில ஆசிரியர்களுக்கு இன்னும் ஊதிய நிலுவை வழங்கப்படவில்லை. அதைக் கொடுப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

## பருவகாலப் படி.

*** 118.—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குற்றாலம் போன்ற சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பணிபுரிகிற ஆசிரியர், ஆசிரியர் அல்லாத இதர அரசு ஊழியர்களுக்கு அந்தந்த இடங்களில் உள்ள பருவகாலப்படி (Seasonal Allowance) கொடுக்கிற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) வினா எழாது.

(முற்பகல் 10-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** குற்றாலம் போன்ற பருவகால முக்கியத்துவம் வாய்ந்த, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு, அதுவும் குறிப்பாகக் குற்றாலத்திற்கு ஜூன், ஜூலை மாதங்களில் பெருவாரியான மக்கள் வருவதால், அங்கு பணி புரியும் ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத அரசு ஊழியர்கள் அனைவரும் விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே குறிப்பாக அந்த இரண்டு மாத காலத்திற்கு அவர்களுக்குப் பருவ